பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி மீ 02 உ வியாழக்கிழமை (18-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 225

### படையினரின் முன்னேறும் முயற்சி முறியடிப்பு

# வெற்றிலைக்கேணியில் நேற்று 4 கவச வாகனங்கள் சிதறின!

## ராணுவத் தரப்பில் பேரிழப்பு

## போராளிகளும் பலர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வெற்றிலைக்கேணி --- கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கிய படையினர் தொடர்ந்து அசைய முடியாத நிலையில் புலிகளின் பிடிக்குள் சிக்கியிருக்கின்றனர்.

நேற்று கவச வாகனங்கள் சகிதம் படையினர் முன்னேற முயன்றபோது புலிகள் அவர்கள் மீது அதிரடித் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 2 பவள் கவச வாகனங்கள், 2 சலாடின் கவச வாகனங்கள் ஆகியன சிதறி, எரிந்து நாசமாகின.

நேற்றைய சண்டையிலும் படையினர் தரப்பில் சிப்பாய்கள் பலர் உயிரிழந்தனர். விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளிலும் பலர் களப் பலியானார்கள்.

வெற்றிலைக்கேணிப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் படையினர் நேற்றுக் காலை பெரிய எடுப்பில் வானத் தாக்குதல்களையும், கடலிலிருந்தும் தரையிலிருந்தும் பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களையும் நடத்தியவாறு ஆனையிறவுப் பக்கமாக முன்னேற முயன்றனர்.

காலை 6-30 மணியளவில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### யாழ். மாவட்டத்திலுள்ள

## சகல பாடசாலைகளையும் இயங்க வைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் தொடர்ந்து இயங்கவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

யாழ். கல்வி அலுவலகத்தில் நேற்று கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

கொத்தணி அதிபர்கள், தேசிய மற்றும் தனியார் பாடசாலைகளின் அதிபர்கள், கோட்டக் கல்வி அலுவலகர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

பாடசாலையின் செயற்பாடுகளும், மாணவர்களின் தொழிற்பாடுகளும் வழமையான நாட்களைப்போல மேற்கொள்ளப்படவேண்டும் என்றும்—

இடவசதி, இடம்பெயர்ந்த மாணவர் நலன் ஆகியன தொடர்பாக பாடசாலை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நாளை முதல் யாழ். கோட்ட பாடசாலைகள் இயங்கும்

யாழ். கோட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் நாளை (வெள்ளிக்கிழமை) முதல் வழமைபோல் நடைபெறவுள்ளதால் ஆசிரியர்களும், மாணவர்களும் தவறாமல் தத்தமது பாடசாலைகளுக்குச் செல்லுமாறு யாழ். கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலைகளை நடத்துவது தொடர்பாக யாழ். கல்வி அலுவலகத்தில் நேறறு நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைத் தொடர்ந்தே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

[ஓ-5]

### கடந்த வருடத்திலேயே

## இந்தியத் தலைவர்களை கொலை செய்ய சதியாம்!

சென்னையில் கடந்த வருடம் செப்டம்பர் மாதம் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்ஸில் கூட்டத்தில் கலந்து கொண்ட ராஜீவ் காந்தி, வி. பி. சிங் உட்பட தேசியத் தலைவர்கள் சிலரை, அங்கு வைத்துக் கொலை செய்வதற்கு தமிழ்ப் போராளிக் குழுக்கள் சதி செய்ததாக இங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தச் செய்தி குறித்து அரசாங்கம் வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் திரு. ரபிராய் நேற்று லோக சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

பிரஸ்தாப செய்தி உண்மையாயின் அது பாரதூரமான விடயம் என்றும், அது நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் அவர் மேலும் சொன்னார்.

(அ-எ)

## காயமுற்ற நிலையில் 55 படையினர்

கொழும்பு, ஜூலை 18

ஆனையிறவு இராணுவ முகாமினுள் காயமடைந்த நிலையில் சுமார் 55 படையினர் சிக்கியுள்ளனர். அவர்களை இன்னும் மீட்கமுடியாத நிலையில் ஸ்ரீலங்காப் படைகள் உள்ளன என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

### லெப். சீலன் நினைவாக

## தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழீழக் கல்வித்துறையின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு, தமிழீழ தேசிய மட்டத்திலான ''தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம்'' ஒன்று மாவீரன் லெப். சீலனின் எட்டாவது நினைவு நாளான 15-7-91 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒன்றியத்தின் யாழ். மாவட்டப் பிரிவுக்கான மத்திய குழு குடாநாட்டிலுள்ள 51 கொத்தணிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது.

மத்திய குழுவின் பொதுச் சபை 63 உறுப்பினர்களை

[2 ஆம் பக்கம் பார்க்க]

# மணலாறில் படையை புலிகள் விரட்டினர்!

## 20 இற்கும் அதிக சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 18

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் முகாமை சுற்றி வளைக்க முற்பட்ட சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா படையினர் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது நேற்று முன்தினம் பகல் ஒருமணியளவில் முகாம் திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை புலிகளின் முகாமைச் சுற்றி வளைத்த படையினருடன் இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் காலை 9 மணி முதல் ஒரு மணி வரை தொடர்ந்து கடும் மோதலில் புலிகள் ஈடுபட்டனர்.

ஹெலியின் உதவியுடன் மோதிய படையினர் பாரிய இழப்புடன் நேற்று முன்தினம் பகல் ஒரு மணிக்கு முகாம் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது,

இந்த மோதலில் இருபதுக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனா. பெரும் எண்ணிக்கையான படையினர் காயமடைந்தனர்.

படையினரிடம் இருந்து 203ரகத் துப்பாக்கி ஒன்றும், ஏ. கே. எல். எம். ஜி. ரகத் துப்பாக்கி ஒன்றும் புலிக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கடலிலிருந்து கலிபர் தாக்கு

சுழிபுரம், ஜூலை 18

காரைநகர், மாதகல் கடற்பரப்பில் நின்ற பீரங்கிப் படகுகளில் இருந்து நேற்று குடியிருப்புப் பகுதிகளை நோக்கி சரமாரியான கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சுழிபுரம் நெல்லியான் பகுதியில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

சேதவிவரம் தெரியவரவில்லை.

இதேவேளை மாதகல் கடல் பகுதியில் நேற்று தொழிலில் [illegible] சென்றதாகத் தெரியவந்தது.

[ஓ-28]

## மேலும் 12 போராளிகள் மணலாறில் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

மணலாறுப் பகுதியில் கடந்த செவ்வாயன்று ஸ்ரீலங்காப் படையுடன் இடம்பெற்ற மோதலில் மேலும் 12 போராளிகள் வீரமரணமடைந்தனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ மேஜர் வேமன் [முசோலை விக்கினேஸ்வரன் - மன்னார்]

★ தியாகலிங்கம் [நாகலிங்கம் ஜெயலிங்கம் - யாழ்ப்பாணம்]

★ கட்டபொம்மன் [மரியாம்பிள்ளை ராஜன் -நெடுந்தீவு]

★ கப்டன் இளங்கோ [கனகராசா ஜெயந்தன் -வல்வெட்டித்துறை]

★ மூர்த்தி [தம்பிராசா அனிதராசா -பருத்தித்துறை]

★ லெப்டினன்ட் நிக்சன் [ஜெயபாலன் அன்னராசா -முல்லைத்தீவு]

★ கனகசபாபதி [பாண்டியன் நாகேந்திரம் -முல்லைத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மணல் மூடைக்கு சாக்குகள் ஆர்வத்துடன் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

புலிகளின் வேண்டுகோளை அடுத்து மண்மூடை தயாரிப்பதற்குத் தேவையான பொருள்கள் மற்றும் உபகரணங்களை குடாநாட்டு மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் நேற்று சேகரித்து விடுதலைப் புலிகளின் அலுவலகங்களில் ஒப்படைத்ததை அவதானிக்க முடிந்தது.

வெற்றுச் சாக்குகள், உரப் பைகள், சணல், சாக்குஊசி, மண்வெட்டி, பிக்கான், சவள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆறு வாரங்கள் நிரம்பிய அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 222, லக்குமி வாசா [வட்டுக் கோட்டை, இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்] தெல்லிப்பளை வீதி, சித்தன்கேணி. (17513)

### விற்பனைக்கு உண்டு

பன்டெம் [Bantam] கோழி முட்டைகள் விற்பனைக்கு உண்டு. ஒன்றின் விலை ரூ. 15/- தொடர்பு கொள்ளவும்: கீவி படப்பிடிப்பாளர்கள், 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி யாழ்ப்பாணம். (17287)

### புதிய புத்தகம்

படித்துவிட்டீர்களா? "The Sparks" [A Collection of ten Short Stories by A. Santhan] விலை ரூ. 20/- கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை, நகுலினி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (4204)

### மணமக்கள் தேவை

பலதரப்பட்ட உத்தியோகத்தர்களும் செவ்வாய் குற்றமுள்ள பெண்களும், ஆண்களும் இருக்கிறார்கள். உங்களுக்கு ஆவணியில் திருமணம் நடக்க வேண்டுமாயின் உடன் சாதகத்துடன் ஞாயிறு. திங்கள், புதன், வெள்ளி நாட்களில் காலை 9 மணியில் இருந்து 4.30 மணி வரை ஆபிஸில் தொடர்பு கொள்ளவும்: ABCDE 328, நாவலர்றோட், ஆனைப்பந்தி. (17542)

### தமிழ் வழி

எழுத்தாளர்களே, ஆசிரியர்களே, மாணவர்களே நீங்கள் எழுதுபவற்றை தூய தமிழில் செய்ய விரும்புகிறீர்களா? கொக்கூர்கிழான் தொகுத்த தமிழ் வழி துணை செய்யும். குழந்தைகளுக்குத் தூய தமிழில் பெயர்கள் வைப்பதற்கு இந்நூலில் பட்டியல் உண்டு. இது வரதர் வெளியீடு: ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும். (4203)

### அறிவித்தல்

புளியங்கூடல் வேலணையில் இயங்கி வந்த எனது வைத்திய நிலையங்கள் தற்காலிகமாக மானிப்பாய் வீதியில் உள்ள 198/1, பொன்னப்பா ஒழுங்கையில் (ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில்) இயங்கி வருகின்றது. வைத்தியர் ச. சிவசம்பு. (17530)

## போராளிகள் வெற்றிக்கு அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

போராளிகளின் வெற்றி வேண்டி நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் நாளை வெள்ளி காலை 10.00 மணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெற உள்ளது. [இ]

## யோகாசனப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 17

அகில இலங்கை சர்வ மத யோகாசன ஸ்தாபனத்தினர் நடத்தும் யோகாசன செய்முறைப் போட்டி 20 ஆம் திகதி காலை 8 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்திலும், பரிசளிப்பு வைபவம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்திலும் நடைபெறும். (த)

# யாழ். ஆசிரியர்களுக்கு கஷ்ட நிவாரண படி இல்லை

யாழ். - மாவட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்வி அலுவலக ஊழியர்களுக்கான கஷ்ட நிவாரணப் படி வழங்க முடியாதுள்ளதாக மாகாண கல்வி அமைச்சு யாழ். கல்வி அலுவலகத்துக்கு அறிவித்துள்ளது.

1988 ஆம் ஆண்டுக்கான கஷ்ட நிவாரணப் படி யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய திணைக்களங்களுக்கு தற்சமயம் வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சிவில் நிர்வாகம் சீரானதும் இந்தக் கொடுப்பனவு வழங்குவது குறித்து ஆராயப்படும் என்று மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-3)

# தட, கள போட்டிக்கான இலக்கங்கள் விநியோகம்

## வட்டவைக் காரியாலயங்களில்

யாழ்ப்பாணம், ஜூலை 18

திலீபன் நினைவுத் தட, கள விழாவில் யாழ். மாவட்டத்திலுள்ள வட்டவைகள் மட்டத்திலான தட, கள போட்டிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் பின்வரும் திகதிகளிலும், அதற்குப் பின்னரும் நிகழ்ச்சி நிரல்களையும் தங்களுக்கான இலக்கங்களையும் வட்டவைக் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

18 ஆம் திகதி; சண்டிலிப்பாய், கோப்பாய், நல்லூர்.

22 ஆம் திகதி: பளை, உடுவில், சாவகச்சேரி, கரவெட்டி

24 ஆம் திகதி; யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பளை, மருதங்கேணி, சங்கானை.

நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் இலக்கங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இறுதி நேரச் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டியாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

போட்டிகள் நடைபெறும் திகதிகள்:

20 ஆம், 21ஆம் திகதிகளில் சண்டிலிப்பாய், கோப்பாய், நல்லூர்.

25 ஆம், 26ஆம் திகதிகளில் பளை, உடுவில், சாவகச்சேரி, கரவெட்டி.

27 ஆம், 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பளை, மருதங்கேணி, சங்கானை. [த]

## காரைநகர் ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

காரைநகர் கொத்தணி அமைப்பினுள் இயங்கும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும் இன்று வியாழன் காலை 10-30க்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## தமிழீழ தேசிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடக்கியுள்ளது இதன் பிரிவுகள் மாவட்டம், கோட்டம், கொத்தணி பாடசாலைகள் என விரிந்து அமைகின்றது.

இதன் பிரதான நோக்கங்கள்:

★ தமிழ்த் தேசிய நோக்கில் அனைத்து ஆசிரியர்களையும் இணைத்துக் கொள்ளல்.

★ கல்வி வல்லுனர்கள், ஆசிரியர்கள் ஆகியோரால் முன் வைக்கப்படும் கல்வி மறுசீரமைப்புக் கொள்கைகளை உச்சப் பயன்பாட்டுக்கு இட்டுச் செல்லல்.

★ தமிழீழத்தில் ஒவ்வொரு குழந்தையும் தேசியப் பற்று, துறைசார் நிபுணத்துவம் என்பவற்றை பெற்றுக் கொள்ளும் வகையினை நடைமுறைப்படுத்தல்.

★ ஒவ்வொரு தனி மனிதனிடமும் கூட்டுவாழ்வு, தியாகநிலை, தேச நலம் பேணல், சுய பொருளீட்டம், கண்டுபிடிப்புகள் சமத்துவம் பேணல் ஆகிய திறன்களை உருவாக்கும் திட்டங்களை கல்வி இலக்கிற்கு உட்படுத்தல் - என்பனவாகும்.

அத்துடன் இவை போன்ற கொள்கைகளை மையப்படுத்தி உறுதியான நீண்ட பார்வையுள்ள வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இந்த ஒன்றியம் வழி அமைத்துள்ளது.

தமிழீழத்தின் ஏனைய மாவட்டங்களிலும், ஒன்றியத்தின் பிரிவுகள் அமைக்கப்பட்டு தமிழீழ மட்டத்தில் மையப்படுத்தப்படும். (த)

யாழ். மாவட்ட
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## பொது நிர்வாக சபைக் கூட்டம்

இடம்: நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்
காலம்: 19-7-91 வெள்ளி பி.ப. 3-00 மணி

பேர்க்கால நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட இருப்பதனால் சகல கோட்ட நிர்வாக உறுப்பினர்களையும் தவறாது அழைக்கின்றோம்.

[17545] - பொதுச் செயலாளர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மத்திய கல்லூரி அதிபரின்
சிரேஷ்ட புதல்வி

### வீரவேங்கை வானதி

[புத்மசோதி சண்முகநாதபிள்ளை]
அவர்களுக்கு

● எமது கண்ணீர் அஞ்சலிகள் ●

மற்றும் இவரது பிரிவால் துயருறும் எமது அதிபர், மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

தமிழ் மன்றம்,
யாழ். மத்திய கல்லூரி

[17543]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
### சிவபாக்கியம் சங்கரப்பிள்ளை

மண்ணுலகில்: 26 - 01 - 1924
விண்ணுலகில்: 18 - 06 - 1991

தாய் தந்தையருக்குத் தனிமகளாய்த் தோன்றி
தக்க வரன்தான் கிடைத்து திருமகளாய் வாழ்ந்தீர்
தித்திக்கும் முக்கனியாம் இருமைந்தர் ஓர் புதல்வி
தரணியிலே தான் பெற்று முழுமதியாய்த் திகழ்ந்தீர்
தீராத நோய் உமதுடலை வாட்டினாலும்
தீர்க்கமுற நாலாண்டு பராமரித்த புத்திரரின்
நயவினால் நோயை மறந்து -
மேதினியில் மகிழ்ந்திருந்தீர்
திருமணமாகி ஐம்பதாண்டு -
அண்மிக்கும் வேளையிலே
தீர்க்க சுமங்கலியாய் வாழ்ந்துவிட்ட திருப்தியொடு
திடீரென சடுதியாய் விண்ணுலகம் விரைந்திட்டீர்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்புக் கணவரும்,
பாசமிகு பிள்ளைகளும்.

பத்தாவத்தை,
இளவாலை. [17537]

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு தங்கம்மா

கல்வியங்காடு நல்லூரைச் சேர்ந்த முருகேசு தங்கம்மா 17-7-91 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் முருகேசுவின் அன்பு மனைவியும், ஆலாலசுந்தரம் (முன்னைநாள், கோப்பாய்த் தொகுதி பாராளுமன்றஉறுப்பினர்),ஞானசவுந்தரி ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகேஸ்வரி (லண்டன்), Dr. தங்கராசா [அரசினர் வைத்தியசாலை, மாம்புரி-புத்தளம்] ஆகியோரின் அன்பு மாமியாரும், வெற்றிச்செழியன், முருகு செழியன், வெற்றிச்செல்வி, ஸ்ரீராம், ஜெயராம் அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18 - 7 - 1991 [இன்று] வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. ஞானசவுந்தரி, (மகள்)

335, ஆடியபாத வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [சி-0255]

## வேலுப்பிள்ளை முருகேசு

காரைநகர் முல்லைப்பிலவைச் சேர்ந்தவரும் வட்டுக்கோட்டை அரசடியில் வசித்தவருமான வேலுப்பிள்ளை முருகேசு நேற்று (17 - 7 - 91) இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கமலம்மாவின் (அன்னமுத்து) அன்புக் கணவரும், சரஸ்வதி, சுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினம், காலஞ்சென்ற கார்த்திகேசு ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தில்நாதன் (சுவிஸ்) இராஜேஸ்வரி (சுவிஸ்), சிவமலர், கீதாமலர், தவமலர், நகுலேஸ்வரன் (சுவிஸ்), நந்தகுமாரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18 - 7 - 91) பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தத்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஆ. அருளம்பலம்

அரசடி வீதி,
வட்டுக்கோட்டை. (17546)

## திருமதி தியாகராசா ஐயர் பாலாம்பிகை அம்மா

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த தியாகராசா ஐயர் அவர்களுடைய மனைவி பாலாம்பிகை அம்மா [17 - 7 - 1991] அன்று காலமானார். இவர் ஞானசேகரஐயர், லலிதாம்பாள், கெங்காதரக்குருக்கள், சாமிநாதஐயர் ஆகியோரின் தாயாரும் வைத்தீஸ்வரன், ஞானலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, நிர்மலா ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் [18 - 7 - 1991] வியாழக்கிழமை பகல் 12.00 மணிக்கு ஈவினையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்களும் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
தி. கெங்காதரக்குருக்கள் (மகன்)

ஈவினை. [17289]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தெரிந்த வெற்றி

ஆனையிறவில் போர் தொடங்கி ஒரு வாரம் கழிந்து விட்டது. தாம் தோல்வி கண்டு விடக் கூடாது என்பதற்காக அரசாங்கப் படைகள் மூன்றும் ஒன்றாக இணைந்து பெரும் போர் நடத்துகின்றன.

ஆனையிறவு முகாமிற்குள் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உட்பட்டு இருக்கும் இராணுவத்தினரை மீட்பதற்காக, கடல்வழி மூலம் புதிதாகத் துருப்புகள் இறக்கப் பட்டுள்ளன.

தமது ஆட்பலத்தினாலும், ஆயுத தளபாட வசதியினாலும், மேலதிக வசதிகளினாலும் விடுதலைப் புலிகளை வென்று, தாம் இராணுவ பலத்தில் மேலோங்கியவர்கள் என்பதைக் காட்ட வேண்டும் என்ற உத்வேகத்துடன் அரச படைகள் மூன்றும் ஒன்று திரண்டுள்ளன.

விடுதலைப் புலிகள் ஆட்பலத்தால், ஆயுத பலத்தால் குறைந்திருந்தாலும் அவர்களின் மனோபலம் குன்றவில்லை. எப்பாடுபட்டேனும் எதிரியை வென்றுவிட வேண்டும் என்ற இலட்சிய வீரத்துடன் சமர் புரிகிறார்கள் சளைக்காது பதிலடி கொடுத்து வருகிறார்கள். தீரத்துடன் போராடுகிறார்கள்.

யுத்தம் என்றால் சில கட்டங்களில் ஒரு பக்கம் வெல்வது போலவும், மறுபக்கம் பின்னடைவது போலவும் தெரிவது உண்டு. ஆனால் மணிக்கு மணி, நிமிடத்துக்கு நிமிடம் நிலைமை மாறிக் கொண்டே இருக்கும். இறுதி முடிவு எதிர் பார்த்ததிற்கு வேறாகவும் அமையலாம்.

ஆனையிறவுப் போராட்டத்தில் வெற்றி யாருக்கு என்பதை உடனடியாக எவராலும் சரியாக எடைபோடவோ, நிர்ணயிக்கவோ முடியாது. ஆனால் தமிழ் மக்கள் தமது தரப்புக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழக்க வேண்டியதில்லை.

படையினர் முன்னேறுகிறார்கள் என்றோ அல்லது வெற்றி அவர்களின் பக்கம் நாடுகிறது என்றோ அரசாங்கம் சொல்லக்கூடும். அதனை ஆதாரமாக வைத்து, யுத்த களத்தில் இருந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து செய்தி சேகரிக்கும் செய்தி ஏஜென்சிகள் வெளியிடும் தகவல்களைக் கேட்டு மக்கள் மனம் தாழ்தலாகாது.

களத்தில் நிற்கும் போராளிகள் மனம் சலிக்காமல் உயிரைத் துச்சமென மதித்துப் போராடும் போது, மக்கள் வீண் கற்பனைகளைச் செய்து சலனமடையக் கூடாது. தமிழர் பக்கமே வெற்றி என்று மனதில் இருத்திக் கொண்டு, போராளிகளுக்கு மேலும் உற்சாகம் அளிக்கும் விதத்தில் எல்லா வகைகளாலும் உதவ வேண்டும்.

ஆனையிறவுப் போரில் தமிழர் தரப்புக்கே உண்மையான வெற்றி என்பதையும் மறந்து விடலாகாது.

அரசு எதுவும் அமையாத நிலையில், தமிழர் விடுதலை இயக்கம் ஒன்று, அரசாங்கம் ஒன்றின் முப்படைகளும் சேர்ந்து பலத்த போர் நடத்த வேண்டிய தேவையை உருவாக்கியிருக்கிறது என்றால், அதுவே பெரும் வெற்றி என்பதை உணர வேண்டும்.

முப்படைகளையும் சேர்த்து உலுக்கும் சக்தி ஒரு விடுதலை இயக்கத்துக்கு வந்து விட்டது என்றால், வெற்றி அந்த இயக்கத்தையும், அதற்கு ஆதாரமாக விளங்கும் மக்களையுமே சாரும். தமிழர்களையே சேரும்.

ஆகவே யுத்தத்தின் இறுதி முடிவு கிடைக்கு முன்னரே, ஆனையிறவுப் போர் தமிழர்களின் இராணுவ ரீதியான பெருவெற்றி என்று துணிந்து கூறலாம்.

# திருச்சியில் ரயில் பாலத்தை குண்டு வைத்து தகர்க்க முயற்சி

சென்னை, ஜூலை 18

திருச்சி அருகில் உள்ள ரயில் மேம்பாலம் ஒன்றின் கீழ் ஒரு பட்டரியுடன் பொருத்தப்பட்ட வெடி மருந்துப் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டன என தெரிவிக்கப்படுகிறது.

மலைகோட்டை எக்ஸ்பிரஸ் ரயில் அந்த வழியால் செல்வதற்குச் சில நிமிடங்கள் முன்பதாக இது கண்டுபிடிக் கப்பட்டது.

மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் ரயிலை வெடிகுண்டு வைத்து கவிழ்க்கவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுவதாக கூறப்பட்டது.

அதன் காரணமாக அந்த ரயில் பாதை வழியாக செல்லவிருந்த வைதேகி உட்பட ஏனைய கடுகதி ரயில்கள் தாமதமாகச் சென்றன என்றும் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, ரயில் பாதைகளைக் காவல் புரிவது பலப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## கொழும்பில் ஒருவர் கைது

கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலகத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கொழும்பு செட்டியார் தெருவில் வசிக்கும் தமிழர் ஒருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று கூறுகிறது.

இந்த நபர் லெபனானில் பயிற்சிபெற்ற விடுதலைப் புலிகள் உறுப்பினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின எனவும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## முதலுதவி பயிற்சி வகுப்பு

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகும். பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

## கூட்டம்

யாழ். கனகரட்ணம் ம. ம. வித்தியாலய முதலுதவி மைய உறுப்பினர்களுக்கான கூட்டம் ஒன்று, இன்று வியாழக் கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். (த)

## கனகபுரத்தில் போராளிகளுக்கு மக்கள் அஞ்சலி

ஆனையிறவு முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த போராளிகளின் 22 புகழுடல்கள் கடந்த வாரம் மக்கள் அஞ்சலிக்காக கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டிருந்தன. ஏராளமான மக்கள் புகழுடல்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் கனகபுரம் மாவீரர் மயானத்தில் புகழுடல்கள் தீயுடன் சங்கமமாயின. (த-3)

## வேங்கைகளுக்கு மயிலணியிலும் அஞ்சலி

ஆனையிறவு மோதலில் வீரமரணமடைந்த ஐந்து போராளிகளின் புகழுடல்கள் மக்களின் அஞ்சலிக்காக நேற்று நண்பகல் முதல் மாலை வரை சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலய மண்டபத்தில் வைக்கப்பட்டன.

அங்கு இடம்பெற்ற நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இறுதியில் புகழுடல்கள் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அங்கு புகழுடல்கள் தீயுடன் சங்கமமாயின. [உ]

# புலிகளை முறியடிப்பதற்கு மாநில அரசுக்கு முழு உதவி!

## மத்திய அமைச்சர் உறுதி தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை 18

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை முறியடிக்கத் தமிழக அரசுக்கு அனைத்து உதவிகளையும் மத்திய அரசு அளிக்கும் என்று உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் அறிவித்தார்.

நேற்று ராஜ்ய சபாவில் எழுத்து மூலம் அளித்த பதிலில் —

''விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசும் தமிழக அரசும் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்டுள்ளது'' —என்று குறிப்பிட்டுள்ளார்.

''விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் ஆழ்ந்த வருத்தத்தையும் ஈடுபாட்டையும் தருகின்றன.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக புலனாய்வு செய்து வரும் விசேட குழு இதுவரை 12 பேரைக் கைது செய்துள்ளது. 32 இடங்களில் சோதனையிட்டது. மொத்தம் 189 பேரை சாட்சிகளாக விசாரித்துள்ளது. இந்தக் கட்டத்தில் மேற்கொண்டு தகவல்களை வெளியிடுவது விசாரணைக்குப் பாதகமாக இருக்கும்.

ஒரு சில பத்திரிகைகள் இது பற்றி வெளியிடுபவைகள் கட்டுக் கதைகள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறுவதை நாம் நம்பவேண்டும்'' — என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராஜீவ் கொலை செய்யப்பட்டது குறித்து யாழ்ப்பாணத்தில் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டதாக வெளியான தகவல்கள் பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது. பல உறுப்பினர்கள் ''வெட்கம், வெட்கம்'' என்று கூறினார்கள். [உ-எ]

# இரு தரப்பினருக்குமே அதிகளவு ஆட்சேதம்!

ஆனையிறவு மோதலில் இரு தரப்பாருக்குமே பெரும் ஆட்சேதம் ஏற்பட்டுள்ளது என்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. அறிவித்தது.

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் யுத்தத்தில் இதுவே மிகத் தீவிரமான யுத்தம் என்றும் பி பி. ஸி. தெரிவித்தது. (உ)

# சிவராசன், சுபா பற்றிய மர்மம் நீடிக்கின்றது!

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தேடப்பட்டு வரும் சிவராசன் மற்றும் சுபா ஆகியோர் ஏன் இன்னும் இந்தியாவில் தங்கியுள்ளனர்?

இந்தக் கேள்விக்கு விடை காண முடியாது இந்திய மத்திய புலனாய்வுத் துறையினர் திணறுவதாக பி.ரி. ஐ. செய்தி ஒன்று கூறுகிறது.

தலைமறைவாக திரியும் சிவராசன் மற்றும் சுபாவிடம் வேறு திட்டம் உண்டா என்ற கேள்விக்கும் புலனாய்வுத்துறையினர் பதிலளிக்க முடியாத நிலையில் உள்ளனராம். [இ-எ]

# ராஜீவின் ஆடைகளை சோனியாவிடம் தர முடிவு

ராஜீவ் காந்தி கொலையுண்டபோது அணிந்திருந்த ஆடைகளை ராஜீவின் மனைவி சோனியா காந்தியிடம் ஒப்படைப்பதற்கு ராஜீவ் கொலை வழக்கை விசாரிக்க நியமிக்கப்பட்ட விசேட நீதிவான் எஸ். எம். சித்திக் முன்வந்திருக்கிறார்.

அந்த ஆடைகள் வழக்கு விசாரணையில் தேவைப்படும் போது திருப்பி ஒப்படைப்பதற்கு திருமதி சோனியாவின் வழக்கறிஞர் உத்தரவாதப் பத்திரம் தந்தால் அவை சோனியாவிடம் ஒப்படைக்கப்படும் என்று நீதிவான் சித்திக் கூறினார். [உ-எ]

# பிலிப்பீன்ஸ் தளத்தை அமெரிக்கா கைவிடும்!

மணிலா, ஜூலை 18

பிலிப்பீன்ஸில் உள்ள சுபிக் தளத்தை வைத்துக்கொண்டு கிளார்க் தளத்தைக் கைவிடுவது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது சம்பந்தமான உடன்பாடு ஒன்று பிலிப்பீன்ஸிக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நேற்றுக் கைச்சாத்தானது.

பிலிப்பீன்ஸ் வெளிநாட்டமைச்சரும் அமெரிக்காவின் சிறப்புப் பிரதிநிதியும் இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

அடுத்த ஆண்டு செப்டெம்பர் மாதம் கிளார்க் விமானத் தளத்தை அமெரிக்கா பிலிப்பீன்ஸிடம் ஒப்படைக்கும் என்று உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிலிப்பீன்ஸில் உள்ள அமெரிக்க விமானத் தளங்களில் கிளார்க் விமானத் தளம் பெரியதாகும்.

அத்தளத்தில் இருந்து 12 மைல் தூரத்தில் உள்ள பினருமே எரிமலை வெடித்ததினால் அத்தளம் சேதமடைந்தது. அதனைத் திருத்துவதற்கு 500 கோடி டொலர் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. [அ-எ-10]

## முறைசாரா கல்வி ஆண்டு இறுதி பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 18

1990 - 91 ஆம் ஆண்டுகளில் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் தொழிற்திறன் பயிற்சி பெற்றவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம், 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரர்கள் தமது அனுமதி அட்டைகளை தமது பாடசாலை அதிபர்களிடம் இன்று 18 ஆம் திகதி காலை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (இ)

## தொழில் நுட்ப கல்லூரி மாணவர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் இன்று வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு கல்லூரியில் சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர். [த]

## மேல் மாகாண ஆசிரியர் வெற்றிடங்கள்

கொழும்பு, ஜூலை 18

மேல்மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்கள் பற்றிய பட்டியல் வெளியானதும், அவ்வெற்றிடங்களுக்கு ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் கல்விச் சேவைகள் குழு அறிவித்துள்ளது. (இ-எ]

## 23ம் திகதிவரை பதியலாம்

கொழும்பு, ஜூலை 18

கொழும்பில் தங்கியிருப்போர் தமது விவரங்களை பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்வதை இம் மாதம் 23 ஆம் திகதிவரை மேற்கொள்ள முடியும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னர் விதித்திருந்த காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது. [ஓ-3]

## யாழ். நகரில் விசர் நாய் படுத்திய பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். பஸ்நிலையப் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் விசர் நாய் ஒன்று அடுத்தடுத்து 5 பேரை கடித்துக் குதறியது.

இந்த நாய் பின்னர் ஒரு சிலரால் அடித்துக் கொல்லப் பட்டது. [ஓ-125]

## லண்டனில் கோர்பச்சேவ்

லண்டன், ஜூலை 18

சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் நேற்று பிரிட்டன் தலைநகர் லண்டனுக்கு விஜயம் செய்தார்.

ஏழு கைத்தொழில் மய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து பொருளாதார உதவி கோருவதே கோர்பச்சேவ் விஜயத்தின் நோக்கம் என்று தெரிகிறது.

பொருளாதார உதவி கோரி 23 பக்க கடிதம் ஒன்றை திரு. கோர்பச்சேவ் 7 கைத்தொழில் மய நாடுகளான அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைத்திருக்கிறார். (இ-எ)

## புஷ் - கோர்பி சந்திப்பு

லண்டன், ஜூலை 18

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவும் நேற்று லண்டனில் சந்தித்துப் பேசினர். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனையிறவு மோதல் தொடர்ந்தால்

# சர்வதேச அரங்கமே தலையிடும் வாய்ப்பு!

லண்டன், ஜூலை 18

வடக்கில் நடைபெறும் சண்டை நீடித்தால் அல்லது இந்தச் சண்டையினால் பெருமளவு பொதுமக்கள் இன்னல்களுக்கு உள்ளாக நேரிட்டால்—

அரசியல் ரீதியில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்படி சர்வதேச அரங்கு ஸ்ரீலங்கா அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் நிலை ஏற்படும்.

— இவ்வாறு பி. பி. ஸி. நேற்றிரவு ஒலிபரப்பிய ஆய்வுரைக் கண்ணோட்டம் ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

இத்தகைய நெருக்கடி ஏற்படும் என்பதால்தான் ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படையினர் விமானப்படை மற்றும் கடற்படையின் உதவியுடன் ஆனையிறவைப் பிடிப்பதற்கு தீவிர நடவடிக்கையில் இறங்கியிருக்கக்கூடும்.

உடனடியாக இராணுவ வெற்றியீட்டுவதே ஸ்ரீலங்கா அரசின் நோக்கம் போல் தெரிகிறது.

வடக்கில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சண்டை குறித்து இந்தியா மௌனம் சாதித்துக்கொண்டிருப்பது ஸ்ரீலங்கா அரசுக்கு ஊக்கம் தரக்கூடும்.

— இவ்வாறு அந்த ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## தீவுப்பகுதி படகுச் சேவை 10 தினங்களாக ஸ்தம்பிதம்

நெடுந்தீவு, ஜூலை 18

கடந்த பத்துத் தினங்களுக்கு மேலாக நெடுந்தீவு உட்பட தீவுப் பகுதிக்கான படகுப் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அரசாங்க அலுவல்கள் காரணமாக இப்பகுதிகளில் இருந்து வந்த அரச ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் மீண்டும் தத்தமது பகுதிகளுக்குச் செல்லமுடியாது உள்ளனர்.

இதேசமயம் திருத்த வேலைகளுக்கென எடுத்துச் செல்லப்பட்ட படகான குமுதினி இன்னும் சேவைக்கு வந்து சேரவில்லை. குமுதினியையும், வலம்புரியையும் மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறப்படுகிறது. [இ-111]

## மத்திய அமைச்சரவையில் அ. தி. மு. க. இடம் பெறாது

மத்தியில் உள்ள இந்திரா காங்கிரஸ் அமைச்சரவையில் அ. தி. மு. கவோ, மாநிலத்தில் உள்ள அ. தி. மு. க. அமைச்சரவையில் இந்திரா காங்கிரஸோ இடம்பெறும் வாய்ப்பே கிடையாது.

இப்படி தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா புதுடில்லியில் செய்தியாளர் மாநாட்டில் சொன்னார்.

இந்திரா காங்கிரஸ் அழைத்தால் மத்திய அமைச்சரவையில் அ. தி. மு. க. சேர்ந்துகொள்ளும் என்று தாம் முன்னர் தெரிவித்ததாகவும் செல்வி ஜெயலலிதா சொன்னார். (இ-எ)

# வியாழன் களப்பலியான 62 போராளிகள் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

கடந்த 11 ஆம் திகதி [வியாழக்கிழமை நள்ளிரவு ஆனையிறவு இராணுவ தடைமுகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 62 போராளிகள் வீரமரணம் அடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வீரமரணம் அடைந்த போராளிகள் விவரம் வருமாறு:

1. அர்ச்சுன் (சந்திரசேகரம் சுரேஸ்குமார், சங்கத்தானை).
2. செல்வா (பொன்னன் நடராசா, வரணி வடக்கு).
3. ஜனகா (செந்தில்வேல் சுகந்தி, மட்டுவில் வடக்கு).
4. ஜீவா (தனபாலசிங்கம் சசிலதா, மட்டுவில் தெற்கு).
5. மங்கை (செல்வராசா மனோன்மணி, யாழ்ப்பாணம்).
6, கஸ்தூரி (கணேசன் வசந்தி, ஊரெழு கிழக்கு).
7. குணேஸ் (சின்னத்தம்பி சங்கர், கெருடாவில் வடக்கு)
8. ரகு (போசப் பெஞ்சமின், பேசாலை)
9. சுரி (கனகரத்தினம் சதீஸ்வரன், சுந்தளாய்).
10. ரட்ணா (கந்தையா விக்னேஸ்வரன், வரணி)
11. அமுதினி (சிவசுப்பிரமணியம் சிவமதி, உரும்பராய் கிழக்கு.)
12. மொசாட் (ஆறுமும் ஜெயமோகன், புதுக்குடியிருப்பு.)
13. தமயந்தி (தில்லையம்பலம் மகேஸ்வரி, முள்ளியவளை.)
14. றெஜினோல்ட் (சந்தணமாரி கணேஸ், பெரிய உப்பளம், மட்டுநகர்.)
15. வாசு [தேசிங்கம் தமிழ்ச் செல்வன், உடுப்பிட்டி].
16. ஜேயச்சா (செல்லத்துரை அமிர்தலிங்கம், கோப்பாய் வடக்கு).
17. யசோ [சிவஞானம் சஜிதா, தொண்டமனாறு].
18. தினேஸ் [செல்லத்துரை ஸ்ரீதரன். மொறக்கொட்டாஞ்சேனை).
19. கருணா [கந்தசாமி சந்திரகுமார், குமபுறுப்பிட்டி].
20. குலேந்திரன் [நவரத்தினம் நாகேஸ்வரன், புளியங்குளம்].
21. சேகரன் [கணபதிப்பிள்ளை இராசநாயகம், மாங்கேணி].
22. யோகன் [தனபாலசிங்கம் மகேஸ்வரன், அல்வாய் வடக்கு]
23. ஈசன் (பாலசுந்தரம் ரவிச்சந்திரன், வந்தாறுமூலை).
24. நிமலன் (தங்கவேலு குமாரன், பன்குளம்)
25. வானதி (சண்முகநாதபிள்ளை பத்மசோதி, நல்லூர்)
26. கிருஸ்ணா (பொன்னம்பலம் கௌரிமலர், திருக்கேதீஸ்வரம்)
27. பைரபி(கணேசமூர்த்தி திருமகள், அளவெட்டி வடக்கு)
28, ஆந்திரா (சிங்கராஜன் மேரி புஸ்பலதா, புதுக்குடியிருப்பு).
29. கோமதி (கனகலிங்கம் சுடரொளி, அரா்லி தெற்கு).
30. ராணி (ஐயாசாமி கமலேஸ்வரி, அலம்பில்).
31. குட்டியா(விசுவலிங்கம் சாந்த நாயகி, மட்டுவில் தெற்கு).
32. ஆரபி (முருகேசு செல்வி, துனுக்காய்).
33. வனஜா(சங்கர் ஜானகி மன்னாம்பிட்டி].
34. வீமா (இராஜேந்திரம் கௌரி, துன்னாலை.)
35. கலைவாணி (பாலசுந்தரம் நிர்மலா, சாவகச்சேரி )
36. துளசி (ஐயாத்தம்பி ரஞ்சிதமலர், வரணி).
37. நிரோ (வல்லிபுரம் உதயகுமாரி, மல்லாகம்).
38. மரிஸ்ரலா [(மரியாம்பிள்ளை கொலின்கலிஸ்ரா, வெற்றிலைக்கேணி].
39. அகல்யா [கைலாசபிள்ளை சந்திரகலா, மல்லாவி].
40. ஜீவன் [நடராசா சிவபாலன், கோண்டாவில்].
41. பாலு [அருளம்பலம் குமாரதுரை, மூதூர்].
42. சுரேன் [தெய்வேந்திரம் சுந்தரமூர்த்தி, கந்தளாய்].
43. கலாதரன் [மாணிக்கம் தர்மராஜா, மூதூர்].
44. யசோதரன் [வேலுப்பிள்ளை செல்வராஜா, வவுனியா].
45. அந்தோனி [தம்பிப்பிள்ளை சிவகுமார், மாங்கேணி],
46. பட்டேல் [அழகையா சாந்தகுணம், கழுவந்தன் கேணி].
47. றோமியோ [சபாரட்ணம் சுரேஷ்குமார், அடம்பன்].
48. மைக்கல் [ஆழ்வான் விநாயகமூர்த்தி, நெல்லியடி].
49. நீலன் [இராமகிருஷ்ணன் இராஜ்குமார், திருமலை].
50. அல்பேட் [கணபதிப்பிள்ளை சுவேந்திரன், தம்பசிட்டி].
51. யோகன் [விசுவநாதன் சிவபாலன், மாங்குளம்].
52. அர்ஜுன் [பத்திநாதர் தர்சன், சுண்டுக்குளி].
53. குருபவன் [சாமிநாதன் சாந்தகுமார், கிளிநொச்சி].
54. ஜெகன் [சவரி மோகனதாஸ், மயிலிட்டி].
55. சிங்கன் [சின்னையா நாகேஸ், மாங்குளம்]:
56. சசி [சவுந்தராஜன் சுரேஸ்குமார், நிலாவெளி].
57. கரிகரன் [சதாசிவம் தர்மகுலசிங்கம், மானிப்பாய்].
58. கிருபா [நீலப்பிள்ளை கதிர்காமநாதன், வரணி].
59 இதயன் [சுப்பிரமணியம் சுந்தர், மூதூர்].
60. சுந்தரமூர்த்தி [சிவகுரு கிருஸ்ணபவான், சுன்னாகம்].
61. லக்ஸ்மன் [தவானந்தவேல் குகதீஸ்வரன், வல்வெட்டித்துறை].
62. சரத்பாபு [நவரட்ணம் கோபிநாத், கொக்குவில்].

## பரீட்சை ஏற்பாடுகளை மேற்கொள்ளக் கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் ஜி. சி. ஈ. உயர்தர மற்றும் சாதாரணதரப் பரீட்சைகளை நடத்துவதற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ். கல்வி அலுவலகம் பரீட்சை ஆணையாளரையும், செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளையும் கோரியிருக்கிறது.

பரீட்சை அனுமதி அட்டை, காகிதாதிகள், வினாத் தாள்கள் போன்றவற்றை கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடு செய்யுமாறும் அந்தக் கோரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜி சி.ஈ.[உயர்தர] பரீட்சை அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையும், சாதாரணதர விசேட பரீட்சை அதைத் தொடர்ந்தும் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது தெரிந்ததே. [உ-3]

## துணைப் படை வீரர் வீரமரணம்

நேற்று முன்தினம் வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளின் துணைப்படை வீரர் குட்டி (கணேசலிங்கம் சபேஸ் — நல்லூர்) வீரமரணமடைந்தார்.

கோட்டை, காரைநகர், ஆனையிறவு உட்பட பல மோதல்களின்போது களத் [illegible] களுடன் இவர் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## வெற்றிலைக்கேணியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பவள் கவச வாகனங்கள் சகிதம் படையினர் நகர முற்பட்டபோது அவர்கள் மீது புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர் என்றும்—

இந்தத் தாக்குதலில் ஒரு பவள் கவச வாகனம் சிதறி நாசமாகியது என்றும்—

அதனையடுத்து படையினர் தமது முயற்சியைக் கைவிட்டு சற்றுப் பின்வாங்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது

தொடர்ந்து நண்பகல்வரை இப்பகுதியில் கடும் ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்தன.

பின்னர் பிற்பகல் 2.30 மணியளவில் மீண்டும் படையினர் ஆக்ரோஷமாகத் தாக்குதல் நடத்தியபடி முன்னேற முயன்றனர்.

புலிகளின் பதில் தாக்குதலும் உக்கிரமாக இருந்தது. படையினரின் கவசவாகனங்கள் முன்னேற முயன்றபோது அவற்றை நோக்கி புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

மாலைத் தாக்குதலில் இரு சலாடின் கவசவாகனங்களும், ஒரு பவள் கவசவாகனம் சிதறி எரிந்தன.

கவச வாகனம் சிதறச் சிதற படையினர் முன்னேற முயன்றனர் என்றும்—

எனினும் மாலையில் மூன்றாவது கவசவாகனமும் சேதமடைந்ததை அடுத்து படையினர் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டுப் பின்வாங்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடல்மூலம் தரையிறக்கப்பட்ட கவச வாகனங்களில் நான்கு சிதறி நாசமாகியிருப்பது, கரையிறங்கிய படையினருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாகக் கருதப்படுகிறது.

தற்சமயம் முன்னேற முடியாது தரித்து நிற்கும் படையினர் புலிகளின் நிலைகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதல்களையும் பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தி வருகின்றனர்.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதியில் டொம்மர், ஹெலி, அவ்ரோ சீனச் சகடை விமானம் ஆகியவற்றின் வானக் குண்டு வீச்சுத் தாக்குதலும் நேற்று முழு நாளும் உக்கிரமாக இருந்தது.

எனினும் தரையிறங்கிய படையினரை தடுத்து வைக்கும் முயற்சியில் புலிகள் முனைப்புடன் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை—

புலிகளின் நெருக்குப்பிடிக்குள் தொடர்ந்து சிக்கியிருக்கும் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியிலும் நேற்று அவ்வப்போது மோதல்கள் இடம்பெற்றன.

முகாமின்மீது தொடர்ந்தும் புலிகள் பசிலன் தாக்குதல் நடத்தி வருகின்றனர். [உ-3-15]

## மணல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆகியவற்றையே பொதுமக்கள் சேகரித்து வழங்கினர்.

இப்பொருள்கள் மேலும் தேவைப்படுவதால் அவற்றைத் தொடர்ந்து சேகரித்துத் தருமாறு விடுதலைப் புலிகள் பொது மக்களைக் கேட்டுள்ளனர். [உ-15-168]

## மணலாறில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளால் கைப்பற்றப்பட்டன.

நண்பகலுக்குப் பின்னர் மாலைவரை ஸ்ரீலங்கா விமானங்கள் சண்டை நடந்த பகுதிகளில் கடும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. நாயாறு கடற்பகுதியில் இருந்து குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் உடைமைகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## சகல...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இயங்கும் நேரத்தில் மாற்றம் செய்யப்படவேண்டின் அதிபர்கள், கொத்தணி அதிபர், கோட்டக்கல்வி அலுவலகர் ஆகியோருடன் கலந்துரையாடி தீர்மானங்களை எடுக்கலாம் என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஓ-5)

## விண்ணப்ப முடிவு

யாழ். சைவ பரிபாலன சபையினர் நடத்தும் 1991 ஆம் ஆண்டுக்கான சைவ சமய பாடப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் இம்மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (இ)

## மேலும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தீவு]

★ ராமராஜ் [பேரின்பம் கணேசமூர்த்தி - மட்டக்களப்பு]

★ கப்டன் பிலாஸ்ரிக்கோ [பேரின்பராஜா ஜீவானந்தராஜா - கிளிவெட்டி]

★ இரண்டாம் லெப்டினன்ட் யோகராசா [கந்தையா நாகேந்திரம் - மட்டக்களப்பு]

★ சூரன் [சிவலிங்கம் குமார் - மட்டக்களப்பு]

★ இரண்டாம் லெப்டினன்ட் கௌரிதரன் [யோகராசா மகேந்திரன் - திருமலை]

கடந்த திங்களன்று இப்பகுதியில் நடந்த மோதலிலும் பன்னிரு போராளிகள் வீரமரணம் அடைந்தனர் என்பது தெரிந்ததே. [உ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org